# 1. கானகத்துக் கீதங்கள்.



## இன்பவாழ்வு

தேக்கும் தென்னையும் கமுகு மரங்களும்
தோளோடு தோளாய் உரசுது பார்!
பூத்துள வேம்பு அரசொடு வேங்கையும்
போற்றும் அசோகும் வளருது பார்!

மானிங்கு குதித்து ஓடிடும் - நல்ல
மந்திகள் தாவியே விளையாடும்!
தேனிங்கு கவி பாடிடும் - அங்கே
திருட்டு வண்டுகள் தாளம் போடும்!.

காட்டுப்புறாவகைக் கானாங்கோழி - கத்தும்
காடை, கவுதாரி, செம்போத்தும்
பாட்டுக் குயிலும் கூகையும் - அங்கே
பேசும் கிளியுடன் கொஞ்சுது பார்!

அன்னமோ டிங்கே மயிலினங்கள் - நல்ல
ஆனந்த நடனம் ஆடுது பார்!
சன்னமான மழைத்தூறல் - மணம்
சந்தனம் போல வீசுது பார்!

## மெட்டு அமைப்போம்

❖ பாடலை இனிய மெட்டமைத்துப் பாடுங்கள்.

## பிடித்த வரிகள்

❖ இப்பாடலில் உங்களுக்கு விருப்பமான வரிகள் எவை?
காரணம் எழுதுங்கள்.

________________________________________

________________________________________

## இரசிப்போம் எழுதுவோம்

**"மானிங்கு குதித்து ஓடிடும் – நல்ல**
**மந்திகள் தாவியே விளையாடும்**
**தேனிங்கு கவி பாடிடும் – அங்கே**
**திருட்டு வண்டுகள் தாளம் போடும்!"**

பாடல் வரிகளை வாசித்து ஒத்த ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுங்கள்.

## சொற்களைக் கண்டறிவோம்

கீழ்வரும் தொடர்களில் அமைந்துள்ள சொற்களைக் காண்க.

- மானிங்கு > மான் + இங்கு
- மயிலினங்கள் > ____________________
- பாட்டுக்குயில் > ____________________
- மழைத்தூறல் > ____________________

## பிழை திருத்தி எழுதுவோம்

- கீழ்வரும் பத்தியிலுள்ள பிழைகளைக் கண்டறிந்து திருத்தி எழுதுங்கள்.

ஆரசன் பயணத்தைத் தோடர்ந்தான். பருந்து சத்தமீட்டுக் கோண்டே மிண்டும் வந்தது. அவன் தாலையில் எச்சமிட்டுக் கொண்டது. அரசன் கொபம் கொள்ளவீல்லை. தன் தலைப்பாகை யைக் கழற்றீ விசி ஏறிந்தான். புதிய தலைப்பாகை கொண்டு வாரச் சொய்து அணிந்து கோண்டான்.

# மரத்தின் கண்ணீர்



வசந்த காலம் தொடங்கியது.
மரங்களும் செடிகொடிகளும் பூத்துக் குலுங்கின.
விலங்கினங்கள் ஆடிப்பாடி விளையாடின.
எங்கும் ஒரே மகிழ்ச்சி! குதூகலம்!

இந்த மரம்தான் இங்கே உள்ள மரங்களின் தாய்மரம். இதில்தான் நாங்கள் எல்லோரும் கூடு கட்டி இன்பமாய் வாழ்ந்திருந்தோம். எங்களுடன் குரங்குமாமா உட்பட எல்லா நண்பர்களும் இங்குதான் கூடியிருப்பார்கள். இன்பமாகக் கதை பேசிக் கொண்டி ருப்போம்; கனிகளைப் புசித்து இன்புறுவோம்.

**அவர்கள் என்னென்ன கதைகள் பேசி மகிழ்ந்திருப்பார்கள்?**

அப்போதுதான் அந்த அதிர்ச்சியான செய்தி வெளிவந்தது. எங்கள் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது. நாங்களெல்லாரும் பயத்தால் உறைந்துபோனோம். ஒருவரையொருவர் பார்த்து அழுது புலம்பினோம்.

- **நீங்களும் சில அதிர்ச்சியான செய்திகளைக் கேட்டுப்பயந்திருப்பீர்களல்லவா? அவற்றைக் கூறுங்களேன்.**

குரங்குமாமா, செய்தியை உரக்கக்கூறியது.

"நமது நாட்டு மன்னன் பிருகதத்தனுக்குப் புதிய அரண்மனை கட்ட வேண்டுமாம். ஒரே மரத்தாலான பெரிய தூண்கள் வேண்டுமாம். அரசாங்கத் தச்சர்களை அழைத்து ஆலோசனையும் செய்துள்ளாராம்" என்று திகைப்புடன் கூறியது.

"அதற்கு என்ன செய்யப் போகிறார்களாம்?" என்றோம் நாங்கள் அனைவரும்.

"இந்த மரம்தான் தகுதியான மரம் என்று அவர்கள் தீர்மானித் திருக்கிறார்களாம்", என்றது குரங்குமாமா.



அது கூறிமுடிக்கவும், தச்சர்கள் மரத்தடியில் வந்து நின்றார்கள். எங்களது முகங்களெல்லாம் பயத்தால் வெளிறின.



"இது மிகவும் பொருத்தமான மரம். இது மிகவும் பருத்து வானளாவ உயர்ந்து நிற்கிறது. இதையே தூண்களாக உருவாக்கி அரண்மனையைக் கட்டி விடலாம்" என்றார்கள் தச்சர்கள். மரத்திலிருந்த பறவைகளைப் பார்த்து, "அடுத்தமாதம் இந்த மரத்தை வெட்டப்போகிறோம். வேறு ஏதேனும் மரத்தில் சென்று தங்கிக் கொள்ளுங்கள். பிறகு எங்களைக் குறை கூறாதீர்கள்" என வேண்டினார்கள்.

" இவர்கள் என்னை வெட்டிவிட்டால் என்நிழலில் வாழும் நீங்களும், ஆயிரக் கணக்கான செடிகளும் அழிந்து விடு வீர்களே" என்று எங்களிடம் சோகமாகக் கூறியது மரம்.

அன்றிரவு மன்னனின் கனவில் தோன்றிய மரம், "அரசே! நான் பல ஆண்டுகளாக உயிர்வாழ்கிறேன். மனிதர்கள் எல்லோரும் என்னிடம் அன்பு காட்டுகின்றனர். என் வாழ்நாளில் எத்தனையோ புகழ்மிக்க அரண்மனைகள், மாளிகைகள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை யாரும் எனக்கு இன்னல் விளைவித்தது இல்லை. என் நிழலில் பல இனங்கள் வாழ்கின்றன. ஏராளமானோர் என் கனிகளை உண்டு மகிழ்கின்றனர்.

சாவுக்காக நான் வருந்தவில்லை. நான் இறந்துவிட்டால் என்னை நம்பி உள்ள நீங்களும், செடிகொடிகளும், பறவைகளும், விலங்குகளும், புழுப்பூச்சிகளும் வாட நேரிடும். அதற்காகத்தான் வருந்துகிறேன். என்னை வெட்ட வேண்டாம் என்று சொல்லுங்கள்" என மன்னனிடம் வேண்டியது.



ஆனால் அரசனோ, "அரண்மனை கட்ட உன்னைப் போன்ற மரத்தைத்தான் தேடினேன். என் நல்வினையின் பயனாகவே நீ கிடைத்தாய். அரண்மனைத் தூணாக அழகுற நின்று பெருமைபெறப் போகிறாய். அதற்காக மகிழ்ச்சி அடைவாய்!" என்றான்.

"அரசே! அப்படியானால் எனக்கு ஓர் உதவி செய்யுங்கள்", என்றது மரம்.

"என்ன உதவி?," அரசன் கேட்டான்.

"அரசே! இலைகள் உள்ள சிறு கிளைப்பகுதியினை முதலில் வெட்டுங்கள். பிறகு கிளைகளை வெட்டுங்கள். நான் மொட்டைமரமாக நிற்பேன். அப்போது அடிமரத்தை வெட்டுங்கள்", என்றது.

இதைக்கேட்ட அரசன் அதிர்ச்சி அடைந்தான்.

"மரமே! நீ கேட்பது போல் செய்தால் மிகவும் துன்பப்பட வேண்டி இருக்குமே! ஏன் இப்படிப்பட்ட உதவியைக் கேட்கிறாய்?" என்றான் அரசன்.

### கதை எழுதுவோம்:

- மரம் ஏன் இப்படிப்பட்ட உதவியைக் கேட்டது? கதையைத் தொடர்ந்து எழுதுங்கள்.

### நானாக இருந்தால்

- நீங்கள் அரசனாக இருந்தால் என்ன முடிவு எடுப்பீர்கள்?

### இரசனைக் குறிப்பு எழுதுங்கள்

- கதையில் விருப்பமான பகுதி எது? ஏன்?

### நடிப்போம்

- கதையை நடித்துக் காட்டுங்கள்.

### உரையாடல் எழுதுவோம்

- மரம்வெட்டுவோரை நீங்கள் சந்தித்தால் என்னென்ன பேசுவீர்கள்? உரையாடல் எழுதுங்கள்.

மாணவி : நண்பர்களே! அங்கே பாருங்கள்... அவர்கள் உங்களைப் பார்த்துப் பயந்து அழுகிறார்கள்.

மரம்வெட்டி: குழந்தையே! நீ சொல்வது எங்களுக்குப் புரியவில்லை! அவர்கள் ஏன் எங்களைப் பார்த்துப் பயந்து அழ வேண்டும்?.

மாணவி : அதுவா?..........................................................................................
..........................................................................................

மரம்வெட்டி: ..........................................................................................
..........................................................................................

மாணவி : ..........................................................................................
..........................................................................................
..........................................................................................


மரம்வெட்டி: சரி குழந்தாய்! நீ கூறுவது எங்களுக்கு இப்போதுதான் புரிந்தது. இனிமேல் இதைப் பாதுகாப்பதுதான் எங்கள் நோக்கம்.

## படம் வரைவோம்

- மரம் கேட்டது போல் அரசன் செய்திருந்தால் மரத்தின் நிலை என்ன? படம் வரையுங்கள். வண்ணம் தீட்டுங்கள்.

## அறிவிப்புப் பலகை உருவாக்கலாம்

- வனப்பாதுகாப்பு முகாம் நடத்தி வனத்தைப் பாதுகாக்க அறிவிப்புப் பலகை உருவாக்குங்கள்.



## கலந்துரையாடலாம்

- அறிவிப்புப் பலகையை எங்கெங்கே வைக்கலாம்? கலந்துரையாடி முடிவெடுங்கள். தக்க காரணத்தையும் கூறுங்கள்.

## பெயர் அறிவோம்

* **கீழ்வரும் தொடர்களில் பெயரைக் குறிக்கும் சொற்களை அடிக்கோடு இடுக.**

- பூக்கள் அழகானவை.
- அரசன் திகைத்தான்.
- தூண் மரத்தால் ஆனது.
- அறிவிப்புப்பலகை அங்கு இருக்கிறது.
- பறவைகள் கூடுகட்டுகின்றன.
- மான் துள்ளி ஓடும்.

## தொடர் அமைப்போம்

* **கீழ் வரும் தொடர்களைப் பாருங்கள். வட்டத்துக்குள் தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லையும் இவ்வாறு தனித்தனித் தொடர்களாக மாற்றுங்கள்.**

- குயிலி பாட்டுப்பாடினாள்.
- ........................................... பாடுகிறாள்.
- ........................................... பாடுவாள்.
- ...........................................
- ...........................................
- ...........................................
-
-
-

